தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 2-3-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கொண்டைக்கடலை விலை நிலையாக இருக்கும்

இந்தியா, கொண்டைக்கடலை உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் டெசி மற்றும் காபூலி என்ற இரு இரக, கொண்டைக்கடலை 3:1 என்ற விகிதத்தில் பயிரிடப்படுகிறது. இவை மொத்த உலக உற்பத்தியில் 75 சதவீதம் பங்களிக்கிறது. நாட்டில் விளையும் மொத்த பருப்பு வகைகளில் கொண்டைக்கடலை 45 சதவீதம் பங்களிக்கிறது. முக்கிய புரதங்கள் கொண்டைக்கடலையில் அதிகம் காணப்படுகிறது.

கொண்டைக்கடலை ரபி பருவத்தில் பயிரிடப்படும் முக்கிய பயிராகும். இவை செப்டம்பர் - நவம்பர் மாதங்ளில் விதைக்கப்பட்டு பிப்ரவரி மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது. நாட்டின் மிகப்பெரிய உற்பத்தியாளரான மத்தியபிரதேசம் மொத்த உற்பத்தியில் 40 சதவீதத்திற்கு மேல் பங்களிக்கிறது. இந்தயாவில், 2014-15ம் ஆண்டு 85.91 இலட்சம் எக்டரில் கொண்டைக்கடலை பயிரிடப்பட்டு 71.70 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2014-15ம் ஆண்டில் இந்தியாவில், மொத்த பருப்பு வகை ஏற்றுமதியில் கொண்டைக்கடலை 85.64 சதவீதம் முக்கிய பங்கு வகிக்கிறது. இவை பாகிஸ்தான், அல்ஜீரியா, இலங்கை, ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் கொண்டைக்கடலை பயிரிடப்படுகிறது. 2015-16ம் ஆண்டு ரபி பருவத்தில் திருப்பூர் மாவட்டத்தில் சுமார் 2000 எக்டர் அளவில் கொண்டைக்கடலை பயிரிடப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டைவிட

குறைவான பரப்பு ஆகும். தற்போது கொண்டைக்கடலை குவிண்டாலுக்கு ரூ.4800க்கு உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்கப்படுகிறது.

இச்சூழலில் விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ளவேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய கொண்டைக்கடலை விலை விவரங்கள் பற்றிய ஆய்வு மற்றும் வர்த்தக பொருளாதார ஆய்வுகளின் அடிப்படையில் தற்சமயம் நடவு செய்யும் கொண்டைக் கடலைக்கு வரும் 2016ஆம் ஆண்டு மார்ச் - ஏப்ரல் மாத அறுவடையின் போது குவிண்டாலுக்கு பண்ணை விலை ரூ.4,300 – 4,500 ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் விவசாயிகள் நடவு முடிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>

உள்நாட்டுமற்றும் ஏற்றுமதிசந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி- 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயறுவகைத் துறை,
தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2450498

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்